**கூடுதல் மகளிர் நீதிமன்றம், இராமநாதபுரம்**

**முன்னிலை : திருமதி. G. தங்ககார்த்திகா, பி.எஸ்.சி., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்**
**குற்றவியல் நடுவர், கமுதி.**
**நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ.),**
**கூடுதல் மகளிர் நீதிமன்றம், இராமநாதபுரம்**

**2025 ஆம் வருடம் செப்டம்பர் மாதம் 23 ம் நாள் செவ்வாய்க்கிழமை**

**M.P. No. 16/2025**
**in**
**CC No. 05/2023**

1.விக்னேஷ்,
த/பெ.ராமராஜ்,
ஆலங்குளம்,
இராமநாதபுரம் மாவட்டம்.

2. முகேஷ்,
த/பெ.மங்களராமு,
ஆலங்குளம், நல்லிருக்கை அஞ்சல்,
இராமநாதபுரம் மாவட்டம். ... மனுதாரர்கள் / எதிரிகள்

// எதிர் //

அரசுக்காக காவல் ஆய்வாளர்,
திருஉத்திரகோசமங்கை காவல் நிலையம்,
இராமநாதபுரம் மாவட்டம். ... எதிர்மனுதாரர்/குற்றம் முறையிடுவோர்

குற்ற எண். 88/2022,
சட்டப்பிரிவுகள்: 294(b), 323, 506(2) IPC
& 4 of TNPHW Act.

இம்மனு மனுதாரர்கள்/எதிரிகள் தரப்பில் 29.07.2025 ம் தேதி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, அம்மனு இந்நீதிமன்றத்தில் M.P.No. 16/2025 ஆக பதியப்பட்டு, இதுநாள் வரை பரிசீலனையில் இருந்து வந்து இன்று (23.09.2025) இம்மனுவின் பேரில் இந்நீதிமன்றம் வழங்கும்.

THANGA KARTHIKA Digitally signed by THANGA KARTHIKA Date: 2025.09.23 17:35:42 +0530

## உத்தரவு

மனுதாரர்கள்/எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட BNSS பிரிவு 348–ன்படியான மனு பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர்கள்/எதிரிகள் தங்களது மனுவில், இவ்வழக்கில் அரசு தரப்பு சாட்சிகளான அ.சா.6, அ.சா.7, அ.சா.8 கடந்த 22.07.2025ம் தேதியன்று முதல் விசாரணை செய்யப்பட்டுள்ளனர். அன்றைய தினத்தில் மேற்படி வழக்கு சம்மந்தப்பட்ட ஆவணங்கள் கிடைக்கப்பெறாததால் சாட்சிகள் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை என்றும், தற்போது மேற்படி சாட்சிகளை எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது என்றும், அதனால் அ.சா.6, அ.சா.7, அ.சா.8 வரையிலான சாட்சிகளை மீண்டும் அழைத்து விசாரணை செய்ய வேண்டுமென மனுதாரர்கள்/ எதிரிகள் தரப்பில் கோரப்பட்டுள்ளது.

அரசு தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்படவில்லை. மனுதாரர்கள் தரப்பில், தங்கள் தரப்பில் சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்ய இயலாமல் போனது வேண்டுமென்றே நடந்தது அல்ல என்றும் சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்யாமல் போனால் மனுதாரர்களுக்கு மிகுந்த கஷ்ட நஷ்டம் ஏற்படும் என்றும் எனவே அரசு தரப்பு சாட்சிகளான அ.சா.6, அ.சா.7, அ.சா.8 வரையிலான சாட்சிகளை ஆகியோர்களை குறுக்கு விசாரணை செய்ய இம்மனுவை அனுமதிக்க வேண்டும் என்றும் எடுத்துரைக்கப்பட்டது.

இவ்வழக்கில் கடந்த 22.07.2025ம் தேதி அ.சா.6 முதல் அ.சா.8 வரையிலான சாட்சிகள் அரசு தரப்பில் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ளனர். ஆனால், அவர்களை சாட்சிகளாக விசாரிக்கப்பட்ட அன்று எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. இந்த நிலையில் எதிரிகள் தரப்பில் 29.07.2025ல் மேற்படி சாட்சிகளை திரும்ப அழைத்து குறுக்கு விசாரணை செய்ய மனு தாக்கல் செய்யப்பட்டு அம்மனு அனுமதிக்கப்பட்டு, மேலும், இந்த

THANGA KARTHIKA Digitally signed by THANGA KARTHIKA Date: 2025.09.23 17:35:54 +0530

வழக்கின் தன்மை, நீதியின் நலனை கருத்திற்கொண்டும், அ.சா.6, அ.சா.7, அ.சா.8 வரையிலான சாட்சிகளுக்கு தலா 500/- ரூபாய் படிக்கட்டணத்தை சாட்சிகள் முன்னிலையாகும் தேதியில் செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையுடன் மனு அனுமதிக்கப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 23.09.2025 ல் அவையறிய பகரப்பட்டது.

THANGA KARTHIKA Digitally signed by THANGA KARTHIKA Date: 2025.09.23 17:35:58 +0530